# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 11,589 — 1958 නොවැම්බර් 19 වැනි බදාදා — 19.11.1958**

**11,589 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 19 ந் திகதி புதன்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இலக்கம் என். ஈ. 41. — **உப உணவுப் பொருட்கள்**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் உப விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு உபவிலைக் கட்டுப்பாடு அதிகாரி (உணவு) ஆத்தர் கத்பர்ட் பர்தொலோமியுஸ் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதி, வெளிவந்த 11,525 ம் இலக்க விசேட இலங்கை அரசாங்க வர்த்தமான பத்திரிகையில் 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ந் திகதி, பிரசுரிக்கப்பட்ட என். ஈ. 39 என்னும் இலக்கமுள்ள எனது உணவு விலைக் கட்டளையில் மொத்த வியாபாரிகளின் ஆகக்கூடிய மொத்த விலைகள், சில்லறை வியாபாரிகளின் ஆகக்கூடிய சில்லறை விலைகள் முதலியவைகளைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணைகளின் 3 ம் பத்தியில் காணப்படும் விலைகள் 2 ம் பத்தியின் குறிப்பிட்டுள்ள உருளைக்கிழங்கு பற்றிய எனது விலைக்கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 3 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்கும் கூடுதலாக 1 ம் பத்தியில் கூறிய எல்லைக்குள் விற்கலாகாது ;

(3) இக்கட்டளையில் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையில் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளில் எத்தொகையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருளை ஒரு நிகர அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதற்குக்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படவேண்டுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு நிகர அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன் ;

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும், குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறு ஒரு பொருளோடு கலந்து விற்கலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளுக்கு அவ்விடப்பரப்பில் இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இறு " என்பது அவோர்டிபோய்ஸ் எடுத்தளவையை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பினும் குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியின் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்டுமிடத்து, அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டும் என ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையின்) ;
(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எவ்விதமான விற்பனை அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;
(உ) பொருளின் விபரங்கள் ;

(8) குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(9) ஒல்லாந்திலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை விலை, ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 10 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(10) சீனாவிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் மொத்த இருத்தல் ஒன்றின் விற்பனை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 13 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(11) யப்பானிலிருந்து இறக்குமதியாகும் மரப்பெட்டிகளில் (கிறேற்ஸ்) அடைக்கப்பட்ட உருளைக்கிழங்கின் இருத்தல் ஒன்றின் விற்பனை விலை ஒரு மரப்பெட்டிக்கு (கிறேற்றுக்கு) 25 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(12) மரப்பெட்டிகளல்லாத (கிறேற்றுகள்) மற்றைய எவ்வித கொள்கலத்திலோ இருந்து உருளைக்கிழங்கு விற்பனை செய்யப்படின் விற்பனை விலை ஒவ்வொரு கொள்கலத்திற்கும் மொத்த இருத்தலில் இருந்து 3 இருத்தல் கழித்துக் கணக்கிடல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(13) இக்கட்டளையின் பொருட்டு " நிகர " என்பது உருளைக்கிழங்கின் கழிவு அல்லது வெற்று நிறை குறைந்த மொத்த நிறையெனக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு நுவரேலியாக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. சீ. பர்தோலோமியுஸ்,
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

**அட்டவணை**

மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>விபரம் | | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை |
|---|---|---|---|
| | | | ரூ. ச. |
| (1) நுவரேலியா நகரசபைப் பகுதி | | | |
| (2) கந்தப்பளை .. .. | | | |
| (3) நானுஓயா .. .. | | | |
| (4) ரம்படை டவுன் .. | | | |
| (5) சங்கிலிபாலம் .. | | | |
| (6) குடாஓயா .. .. | | | |
| (7) பூண்டுலோயா .. | உருளைக்கிழங்கு | .. | 30 42 |
| (8) திஸ்பனே கோறளை .. | | | |
| (9) பல்லேபனேகோறளை .. | | | |
| (10) மொறபே .. | | | |
| (11) டிலிகுல்டிரி .. .. | | | |
| (12) டயகம .. .. | | | |
| (13) ஆகரபத்தன .. | | | |
| (14) மெதபனேகோறளை | | | |
| (15) ராகலை .. .. | ஷை | .. | 30 55 |
| (16) உடுபுஸ்ஸல்லாவை .. | | | |
| (17) நெல்தண்டாஹின்ன .. | | | |
| (18) ஹாஸ்பத்த .. .. | ஷை | .. | 30 99 |
| (19) வத்துமுல்ல .. | | | |
| (20) கும்பள்கமுவ .. | | | |
| (21) டிம்புல்ல .. .. | | | |
| (22) வடகொட .. .. | | | |
| (23) தலவாகொல்லை .. | ஷை | .. | 30 06 |
| (24) லிந்துல்ல .. .. | | | |
| (25) வலஹா .. .. | | | |
| (26) கொட்டகலை .. .. | | | |

**அட்டவணை**

சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை

| பத்தி 1<br>எல்லை | பத்தி 2<br>விபரம் | | பத்தி 3<br>சில்லறை வியாபாரி நிகர இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|---|
| | | | ரூ. ச. |
| (1) நுவரேலியா நகரசபைப் பகுதி | | | |
| (2) நானுஓயா .. .. | | | |
| (3) கந்தப்பளை .. | | | |
| (4) ராகலை .. .. | | | |
| (5) உடப்புஸ்ஸெல்லாவ .. | | | |
| (6) ரம்படை டவுன் .. | | | |
| (7) சங்கிலிபாலம் .. | | | |
| (8) குடாஓயா .. .. | | | |
| (9) பூண்டுலோயா .. | | | |
| (10) திஸ்பனேகோறளை .. | | | |
| (11) பல்லேபனேகோறளை .. | உருளைக்கிழங்கு | .. | 0 33 |
| (12) மொறபே .. .. | | | |
| (13) டிலிகுல்டிரி .. .. | | | |
| (14) டயகம .. .. | | | |
| (15) ஆகரபத்தன .. | | | |
| (16) மெதபனே கிராமச்சங்கப் பகுதி | | | |
| (17) டிம்புல .. .. | | | |
| (18) வட்டகொடை .. | | | |
| (19) தலவாகொல்லை .. | | | |
| (20) லிந்துல்ல .. .. | | | |
| (21) வலஹா .. .. | | | |
| (22) கொட்டகலை .. .. | | | |
| (23) அம்பவெலை .. .. | | | |
| (24) நெல்தண்டாஹின்ன .. | | | |
| (25) ஹாஸ்பத்த .. .. | ஷை | .. | 0·34 |
| (26) வத்துமுல்ல .. | | | |
| (27) கும்பன்கமுவ .. | | | |
| (28) குபாஹா .. .. | ஷை | .. | 0·35 |

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.